# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.33/2025**

**2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 17- ம் நாள் செவ்வாய்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.6-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 6 | தொழில் | - | துணிக்கடை |
| பெயர் | - | தமிழ் செல்வன் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | பொன்னுசாமி | சமயம் | - | |
| கிராமம் | - | அண்ணாநகர் | வயது | - | 30/2026 |
| சாதி | - | | | | |

**<u>17.03.2026</u>**

**(1,2 எதிரிகள் ஆஜர் இல்லை)**

(1,2 எதிரிகள் தரப்பில் BNSS பிரிவு 355-ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**<u>முதல் விசாரணை:</u>**

1.நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வால்பாறையில் துணிக்கடை நடத்தி வருகிறேன். அ.சா.1 மனோகரன் என்பவரை தெரியும். இவ்வழக்கின் எதிரிகளை தெரியாது. அ.சா.1-க்கும் எதிரிகளுக்கும் இடையே என்ன சண்டை நடைபெற்றது என்று எனக்கு தெரியாது. நான் எந்த சம்பவமும் பார்க்கவில்லை, கேள்விப்படவும் இல்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1. கடந்த 08.02.2025-ம் தேதி மாலை நேரத்தில் நான் துணிக்கடையில் இருந்த போது, அ.சா.1 மனோகரனின் அம்மாவிற்கு நல்லகாத்து எஸ்டேட்டில் பணி ஓய்வு விழா நடைபெறுவதை முன்னிட்டு நான் எனது இருசக்கர வாகனத்தில் நல்லகாத்து எஸ்டேட் குதிரைபட்டி வளைவு அருகில் மாலை 05.30 மணிக்கு சென்ற போது, அ.சா.1 மனோகரன் எனக்கு முன்பாக காரில் சென்று கொண்டிருந்தார் என்று சொன்னால் சரியல்ல. அப்போது எதிரிகள் அங்கு நின்று கொண்டு காரை வழிமறித்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. காரை விட்டு இறங்கி மனோகரனை எதிரிகள் அசிங்கமான வார்த்தைகளால் திட்டி சத்தியா மற்றும் குகநாதன் ஆகியோர் மனோகரனை கையால் மாறி மாறி தாக்கினார்கள் என்று சொன்னால் சரியல்ல. காரில் இருந்த அ.சா.1-ன் தங்கை ஜெனோவா இறங்கி சென்று தடுக்க முற்பட்டபோது, எதிரிகள் அவரையும் பெண் என்றும் பாராமல் கையை பிடித்து இழுத்து தள்ளிவிட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. மீண்டும் மனோகரன் எதிரிகளிடம் இதுசம்பந்தமாக கேட்ட போது, சத்தியா கை வைத்திருந்த இருசக்கர வாகனத்தின் சாவியால் மனோகரனின் வலது பக்க தலையில் ஓங்கி குத்தினார் என்று சொன்னால் சரியல்ல. மனோகரன் சத்தம் போடவே இதை பார்த்த நானும், ஜெனோவாவும் எதிரிகளை பார்த்து சத்தம் போடவே எதிரிகளை மனோகரனை பார்த்து என்னைக்கிருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. பின்னர் மனோகரன் அவரது தங்கையுடன் காரில் புறப்பட்டு வால்பாறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்ற போது, வால்பாறை காவல் நிலைய போலீசார் அவரை விசாரித்து அவர் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் விசாரித்ததாக போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து, எதிரிகளுக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பிறழ்சாட்சியாக மாறி சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>: இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்.திருமதி.என்.மீனாட்சி,B.A.,B.L.,)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

# DEPOSITION OF WITNESS

## (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.33/2025**

**2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 17- ம் நாள் செவ்வாய்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.07 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 07 | தொழில் | - | தலைமைக்காவலர் 1356 |
| பெயர் | - | திரு.தனீஷ் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | சுகுமாறன் | சமயம் | - | |
| கிராமம் | - | வால்பாறை காவல் நிலையம் | வயது | - | 42/2026 |
| சாதி | - | | | | |

**<u>17.03.2026</u>**

**(1,2 எதிரிகள் ஆஜர் இல்லை)**

(1,2 எதிரிகள் தரப்பில் BNSS பிரிவு 355-ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**<u>முதல் விசாரணை</u>:**

1. நான் தற்போது வால்பாறை காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 08.02.2025-ம் தேதி 21.30 மணிக்கு வால்பாறை காவல் நிலையத்தில் பணியில் இருந்த போது, வால்பாறை நல்லகாத்து எஸ்டேட்டை சேர்ந்த வின்சென்ட் அகஸ்டீன் என்பவரின் மகன் மனோகரன் (வயது 34/2025) என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரை பெற்று, நிலைய குற்ற எண்.18/2025 சட்டப்பிரிவுகள் 126 (2), 115(2), 118(1), 351(3) BNS- உ/இ பிரிவு 4 TNPHW Act-ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளேன். (**புகார் மனு அ.சா.ஆ.6-ஆகவும், நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.7-ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்னர் வழக்கு கோப்பினை விசாரணைக்காக நிலைய காவல் உதவி ஆய்வாளர் திரு.ரவி அவர்களின் பார்வைக்கு வைத்தேன். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**</u>

**1. புகாரின் அடிப்படையில் நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் சரிதான். நான் வழக்கு பற்றி விசாரணை செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். எதிரிகளுக்கும், வழக்கு சம்பவத்திற்கு சம்பந்தமல்ல என்றாலும், மேல் அதிகாரி வேண்டுகோளுக்கிணங்க எதிரிகளுக்கு எதிராக தவறாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.**

<u>**மறு விசாரணை**</u> :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்.திருமதி.என்.மீனாட்சி,B.A.,B.L.,)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.